Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 21 திங்கட்கிழமை (03-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 68

# ஈழத்தமிழர் ஆதரவுப் பேரணியால் சென்னை மாநகரமே ஸ்தம்பித்தது!

## ஆறு வருடங்களின் பின்னர் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள எழுச்சி

சென்னை, பெப். 3

கடந்த ஆறு ஆண்டுகளில் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் நடைபெற்றிருக்கும் மிகப்பெரிய மக்கள் எழுச்சியாக ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு நேற்று அதிகாலை வரை சென்னையில் நடந்தது.

லட்சத்துக்கும் மேலான உணர்ச்சி மிக்க தொண்டர்கள் கலந்து கொண்ட பேரணி நேற்று முன்தினம் சென்னை மாநகரையே ஸ்தம்பிக்க வைத்தது.

நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு ஆரம்பமான பேரணி சீரணி அரங்குக்கு வந்து சேர நள்ளிரவைக் கடந்து விட்டது.

தொடர்ந்து நடந்த மாநாட்டில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கையை அனைத்துப் பேச்சாளர்களும் கடுமையாகக் கண்டனம் செய்தனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு முன்பு தமிழக மக்களிடையே ஈழத்து மக்களுக்காக இருந்த எழுச்சி மீண்டும் தமிழகத்தில் பார்க்க முடிகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

''விடுதலைப் புலிகள் இயக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 15 படையினர் கிழக்கில் பலி!

கொழும்பு, பெப்ரவரி 3

**கிழக்கில் மட்டக்களப்பு மாவடிவேம்பு இராணுவ முகாம் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் ஒரு லெப்டினன்ட் தர அதிகாரி உட்பட 14 படையினர் உயிரிழந்தனர்; 16 படையினர் காயமடைந்தனர்; ஆறு படையினரைக் காணவில்லை.**

அதேசமயம் அருகிலிருந்த சித்தாண்டி முகாம் மீது புலிகள் நடத்திய ஷெல் தாக்குதலில் படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். பொது மக்களிலும் இருவர் உயிரிழந்தனர்.

கிழக்கிலங்கையில் மட்டக்களப்புக்கு வடக்கே ஒதுக்குப்புறமாக அமைந்திருந்த மாவடி வேம்பு இராணுவ முகாமே நேற்று அதிகாலை 12. 15 பணி முதல் சில நூற்றுக் கணக்கான புலிகளினால் சுற்றிவளைத்துத் தாக்கப்பட்டது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## படைத் தரப்பில் பதில் தாக்குதல்!

கொழும்பு, பெப். 3

மாவடிவேம்பு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட கடும் தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் நேற்று அப்பகுதியில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினர் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

ஹெலிகளும், பீரங்கிகளும் இதற்குப் பயன்படுத்தப்பட்டன. பாரிய பதில் தாக்குதலில் 24 புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் —

40 பேர் காயமடைந்தனர் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3)

## நாளை சுதந்திர தினம்:

## கொழும்பு நகரில் பாதுகாப்பு தீவிரம்!

கொழும்பு, பெப். 3

நாளை நடைபெறவிருக்கும் 49 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தையொட்டி தலைநகர் கொழும்பில் அதி உச்சப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சில தினங்களுக்கு முன் சோதனைத் தடை நிலையம் ஒன்றில் வைத்து பெண் ஒருவர் தனது தலைமயிரில் செருகியிருந்த சயனைட் குப்பியைக் கழற்றி உட்கொண்டு தற்கொலை செய்த சம்பவத்தையடுத்து, கொழும்பில் தற்கொலைப் படையினர் ஊடுருவியிருக்கலாம் என்ற கருத்து வலுவடைந்திருப்பதாகவும் —

அதையடுத்து ஏற்பாடுகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

வீடுவீடாக கடும் தேடுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அனேகமாக அதிகாலை வேளையிலேயே தேடுதல்கள் ஆரம்பமாகிவிடுகின்றன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தேடுதல்

திருகோணமலை, பெப் 3

திருகோணமலை நகரின் மத்திய வீதிப் பகுதியில் நேற்றுக் காலை வீடு வீடாகத் தேடுதல் நடத்தப்பட்டது. வீடுகளில் இருந்த மக்கள் நகர பஸ் நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டு அடையாளம் காணப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று மாலையும் நகரின் மற்றொரு பகுதியில் தேடுதல் இடம்பெற்றது.

(உ-150-3)

## வெளிநாடுகளில் ஆர்ப்பாட்டம்

லண்டன், பெப். 3

யாழ்ப்பாண நகரில் இருந்து இலங்கைப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் எனக்கோரி இலங்கையின் 49ஆவது சுதந்திர தினமான நாளை, வெளிநாடுகள் பலவற்றில் தொடர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த வெளிநாட்டுத் தமிழ்க் குழுக்கள் திட்டமிட்டிருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

## ஏழு புலிகள் உயிரிழப்பு

திருகோணமலை, பெப். 3

நேற்று நண்பகல் 2 மணியளவில் திருகோணமலை மாவட்டத்தில் சிற்றாறு பகுதியைப் படையினர் சுற்றிவளைத்தனர். அங்கு நடந்த மோதலில் 7 புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் —

அவர்களிடம் இருந்து ரி-56 ரகத் துப்பாக்கிகள் நான்கும், கைக்குண்டுகளும் படையினரால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

## முச்சந்தி முரளி



தான் ஆடாட்டியும் சதை ...

# 13 படையினர் வடக்கில் பலி!

கொழும்பு, பெப்ரவரி 3

**வடக்கில் வெற்றிலைக்கேணிப் பகுதியில் உள்ள இராணுவத்தினரின் பாதுகாப்பு முன்னணி நிலைகள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டார்கள்; மற்றும் நான்கு படையினர் காயமடைந்தனர்.**

கிழக்கில் மாவடிவேம்பு இராணுவ முகாம் மீது தாக்குதல் நடந்த அதேசமயத்திலேயே வடக்கில் வெற்றிலைக்கேணியில் முன்னணி காவலரண்கள் மீதான தாக்குதலும் இடம்பெற்றிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இத்தாக்குதலின் போது புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்தோ —

அவர்கள் ஆயுதங்கள் எதையும் கைப்பற்றினரா அல்லது இழந்தனரா என்பது பற்றியோ —

தகவல் ஏதும் இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (உ-3)

## விசேட தாக்குதல் அணி ஒன்றை பிரபா தயார் செய்கிறாராம்!

இராணுவ நிலைகள் மீது மின்னல் வேகத் தாக்குதல்களை நடத்தக்கூடிய வகையில் ''எலைட் விசேட பயிற்சிக் குழு'' ஒன்றை விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் அமைத்து அதற்கு விசேட பயிற்சி அளித்து வருகிறார் என்று தகவல்கள் கிடைத்துள்ளதாக 'சண்டே லீடர்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நூறு பேரைக் கொண்ட இக் குழு ஒருகிழமைக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய உணவுப் பொருள்களையும் மற்றும் நவீன துப்பாக்கி போன்ற ஆயுதங்களையும் தம்முடன் தூக்கிச் செல்லக் கூடியவர்களைக் கொண்டிருக்கும்.

இக்குழுவுக்கு கடல், தரை, விமானத்தாக்குதலைச்சந்திக்கக் கூடிய விசேட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் வெவ்வேறு இடங்களில் 10 பேர் கொண்ட அணிகளாகப் பிரிந்து தாக்குதல் நடத்தக் கூடிய பயிற்சியும் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

## மன்னார்-நீர்கொழும்பு

## கடல் வழியாகவே புலிகள் ஊடுருவல்!

நீர் கொழும்புக்கும் — மன்னாருக்கும் இடையில் உள்ள கடலில் தீவிர ரோந்து இல்லாததைப் பயன்படுத்தியே விடுதலைப் புலிகளால் சுலபமாக கொழும்பிறகுள் ஊடுருவ முடிகிறது. என கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அந்தக் கடற்பிரதேசத்தில் தீவிர கடற்படை ரோந்து மேற்கொள்ளப்படாவிட்டால் நகருக்குள் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்க முடியாது என்றும் —

கடற்படை இந்தரோந்தை உடனடியாக ஆரம்பித்துத் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை இனப்பிரச்சினைக்கு
# தீர்வு காணும் முயற்சியில் அமெரிக்காவும் பிரிட்டனும்?

இலங்கைத் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் அமெரிக்காவும், பிரிட்டனும் தனித்தனியாக ஈடுபட முன் வந்துள்ளன என்று கொழும்புத் தமிழ் வாரப்பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த முயற்சியின் ஓர் அங்கமாக தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் றொபின் ராபெல் இலங்கை வந்து திரும்பியுள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 4 ஆம் திகதி வரை இலங்கையில் மேற்கொண்ட விஜயத்தில் நடத்திய பேச்சுக்களின் தொடர்ச்சியாக மீண்டும் கடந்த வாரம் அவர் இலங்கை வந்தார்.

ஜனாதிபதி, எதிர்க் கட்சித் தலைவர் உட்பட பல முக்கிய தலைவர்களை அவர் சந்தித்துப் பேசினார்.

இதே வேளை — பிரிட்டிஷ் வெளிநாட்டு அலுவல்கள், பொதுநலவாயத் திணைக்கள பிரதி அமைச்சர் விம் பொக்ஸ் இவ்வாரம் இலங்கை வருகிறார்.

கடந்த செப்ரெம்பர் 24 ஆம் திகதி முதல் 29 திகதி வரை இலங்கையில் நடத்திய பேச்சுக்களின் தொடர்ச்சியாக வரும் இவர், இனப்பிரச்சினை தொடர்பாக சகல மட்டத்துடனும் அந்தரங்க பேச்சுக்களை நடத்த விருக்கிறார். (இ-3-150)

# குப்பை மற்றும் கழிவுகளை கொட்ட இடவசதியின்றி மாநகரசபை அவதி

யாழ்ப்பாணப், பெப். 3

யாழ். மாநகர சபை பிரதேசத்தில் நாளாந்தம் சேரும் குப்பை மற்றும் கழிவுப் பொருள்களை அகற்றுவதில் யாழ். மாநகர சபை பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகர சபைப் பகுதியில் உள்ள குப்பை மற்றும் கழிவுகளைக் கொட்ட யாழ்ப்பாணம் காக்கை தீவுப் பகுதியில் 95 பரப்புக் காணி ஒதுக்கப்பட்டு, குப்பை, கழிவுகளும் அங்கு கொட்டப்பட்டு வந்தன.

ஆனால் தற்போது யாழ்ப்பாணப் பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டுவரப்பட்டதில் இருந்து அப்பகுதி இராணுவத்தின் பாதுகாப்பு அரணுக்கு வெளியே தள்ளப்பட்டுவிட்டதால், அதில் குப்பை, கழிவுகளைக் கொட்ட அனுமதி வழங்கப்படுவதில்லை.

இதனை அடுத்து இக்கழிவுப் பொருள்கள் யாவும், (தகரங்கள், போத்தல்கள் தவிர) யாழ். மாநகர சபையின் முயற்சியால் சில தனியார் காணிகளில் கொட்டப்பட்டு வருகின்றன.

இக் காணிகளும் தற்போது குப்பையாலும் கழிவுகளாலும் நிரம்பிக் கொண்டிருக்கின்றன.

இக்காணிகளில் தகர, கண்ணாடிப் பொருள்கள், மற்றும் ஆஸ்பத்திரிக் கழிவுகளைக் கொட்டக் கூடாது என்ற நிபந்தனைக்கமையவே கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

ஆஸ்பத்திரிக் கழிவுகளையும், தகர, கண்ணாடிப் பொருள்களையும் கொட்டுவதற்கு இடவசதியின்றி மாநகரசபை திண்டாடிக் கொண்டிருக்கின்றது.

இதேவேளை யாழ். ஆஸ்பத்திரியும் ஆஸ்பத்திரி வளவில் தேங்கும் கழிவுகளை எரித்தும் அகற்ற முடியாத நிலையில் கழிவுகளை அகற்ற நகரசபையை நெருக்கிக் கொண்டிருக்கிறது.

மேலும் ஆஸ்பத்திரியில் தேங்கும் கழிவுகளை அங்கேயே வைத்துத் தீயிடுவதால் சுகாதார அபாயம் உருவாகி வருவதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

# கிருஷாந்தி வழக்கு இன்று விசாரணை

கொழும்பு, பெப். 3

கைதடியைச் சேர்ந்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி அவரது தாயார், சகோதரன், அயலவர் கொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கு இன்று கொழும்பு பிரதம நீதிவான் முனிதாச நாணயக்கார முன்னிலையில் விசாரணைக்குவர வுள்ளது.

இவ் வழக்கில் கைதடி இராணுவ முகாமைச் சேர்ந்த ராஜபக்ஷ, ஜெயசிங்க, பிரியதர்ஷன, பெரேரா, அல்விஸ், முத்துபண்டா, ஜயதிலக, இந்திரஜித் குமார, நிஷாந்த ஆகியோர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கில் முன்னர் சந்தேக நபர்களாகக் காணப்பட்ட அப்துல் ஹமீட்நிஸார், சமரவிக்கிரம ஆகியோர் மேற்படி கொலையிலோ அல்லது பாலியல் மானபங்கச் செயலிலோ ஈடுபடவில்லையென தெரிய வந்ததையடுத்து அவர்கள் அரச தரப்புச் சாட்சிகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

எனினும் அவர்கள் கொல்லப்பட்டோரின் உடல்களை செம்மணி மயானத்தில் புதைப்பதற்கு உடந்தையாகவும் உதவியாகவும் இருந்தனரென்று வாக்கு மூலங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

இவ் வழக்கில் சாட்சிகளாகவுள்ள 33 பேரில் யாழ். பிரிகேடிய காமினி ஜயசுந்தர, சு கோடீஸ்வரன், கைதடியைச் சேர்ந்த க. நாகேந்திரன், புவனேஸ்வரி ஆறுமுகநாதன் மற்றும் கந்தரம் கௌதம் ஆகியோருக்குத் திங்களன்று ஆஜராக அழைப்பாணைவிடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களது நலனைக் கவனிக்கவென சிரேஷ்ட சட்டத்தரணி ஜி.ஜி. பொன்னம்பலம் ஆஜராகின்றார்.

சட்டமா அதிபர் பிரதிநிதி செல்வி பிரஷாந்தி மகியவர்த்தன வழக்கை யாழ்ப்பாணம் பிரதான இன்ஸ்பெக்டர் உபாலி சேனரத்தின உதவியுடன் நடத்துவார் என்றும் —

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் சஞ்சய், கமகே, நந்தன குணரத்ன ஆகியோர் ஆஜராகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது (இ-5)

# இலங்கையில் அமெரிக்காவின் ஈடுபாடு மூடுமந்திரமாக உள்ளது

### சண்டே ரைம்ஸில் பாதுகாப்புச் செய்தியாளர்

கொழும்பு, பெப் 3

இலங்கையில் அமெரிக்காவின் ஈடுபாடு மூடுமந்திரமாக இடம் பெறுகிறது என்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் பாதுகாப்புத் துறைச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் பாதுகாப்பு நிலைவரம் பற்றிய தமது கட்டுரையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா திறந்த கொள்கை, கருத்துச் சுதந்திரம் என்று பேசுகிறது; ஆனால் இலங்கையில் அமெரிக்காவின் ஈடுபாடு மூடுமந்திரமாகவே இருக்கிறது.

அமெரிக்காவில் பயிற்சி பெற்ற கொமாண்டோக்களைச் சந்தித்தேன். ''விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடக் கூடியதாக அமெரிக்க பயிற்சி எம்மைக் கூர்மைப்படுத்தியுள்ளது'' என்று அவர்கள் கூறுகிறார்கள்.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தின்பாதுகாப்பு அதிகாரியாக இருந்த கேணல் கால் கொக்ரம்பின் காலத்திலேயே அமெரிக்காவின் ஈடுபாடு இலங்கையில் ஆரம்பமானது.

தற்போது பணியாற்றும் பாதுகாப்பு அதிகாரி லெப்டினன்ட் கேணல் மைக்கல் கரோல் புறா இலங்கைப் படையினருக்கு தேவையான உதவிகளை வழங்கி உறுதுணையாக இருக்கிறார்.

அமெரிக்காவின் ஈடுபாட்டை ஆயுதப்படை அதிகாரிகள் வெகுவாகப் பாராட்டுகிறார்கள்.

தற்சமயம் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் றொபின் ராபெல் நாடு திரும்பி இலங்கை குறித்த அறிக்கையைச் சமர்ப்பிப்பார்.

அதன் பின் அவரது பதவிக்கு ரிக் இன்டர் சுருச் என் [illegible] நியமிக்கப்படவிருக்கிறார் என [illegible] மேலும் தெரிவித்தது.

(உ-3-150)

யூனிவேர்சல்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
G. C. E. (A/L)
பொருளியல்: திரு. கருணாகரன்
ஆரம்பம்: 03 - 02 - 97 திங்கள்
மாலை 4-00 p.m.
அளவையியல்: திரு. யுகபாலசிங்கம்
ஆரம்பம்: 03 - 02 - 97 திங்கள்
மாலை 2-30 p m.
(45069)

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை மரியதாசன்

(இளைப்பாறிய ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி)

நவாலியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மரியதாசன் (02- 02- 97) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு-திருமதி அந்தோனிப்பிள்ளையின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான திரு- திருமதி யேசு சகாயம் அவர்களின் அன்பு மருமகனும், டெய்சி புஸ்பராணியின் அன்புக் கணவரும், Dr. புஸ்பலதா (கனடா), Dr. ஜெயறூபன் (விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக் கழகம்), ஜெயச்சந்திரன் (பொறியியலாளர், கட்டடத்திணைக்களம், கொழும்பு) ஜெயமனோகரன் (கணக்காளர், மாலைதீவு), புஸ்பலேகா (ஆய்வாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்), கீத்தா (ஈஸ்வரன் பிறதர்ஸ், கொழும்பு), வினித்தா (கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்), அஜந்தா (மாணவி, திறந்த பல்கலைக் கழகம், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. வசந்தன் (கனடா), சுகந்தி, சசிகலா ஆகியோரின் அன்பு மாமனும், பைரவி, கீரன் (கனடா), சுஜீவன், நில்மினி ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி ஆனோசா ஜெயராஜா, டோமினிக் (அதிபர், புதுமடம் றோ. க. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி.

'மங்கள இல்லம்'
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(45064)

## வேலுப்பிள்ளை ஐயாத்துரை

காங்கேசன்துறை வாசியாகிய வேலுப்பிள்ளை ஐயாத்துரை அவர்கள் 25 – 01 - 1997 இல் முல்லைத் தீவில் காலமானார்.

இவர் திருமதி சின்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி சின்னம்மாவின் சகோதரரும், காலஞ்சென்ற மணி, பூ, அகிலாண்டம், ஜானகி, வெள்ளி. கிளி, தம்பிரான் (அமரகுலசிங்கம், தலைவர், வலி. வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்), கட்டி (குணசிங்கம், சுவிஸ்), விசயரத்தினம், விஜபகுமார் (லண்டன்), ரங்கநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், பூலோகசிங்கம், தங்கவேலாயுதம், தங்கராசா, நாகராசா (L O L.), தருமராசா, சிவசண்முகநாதன், வளர்மதி (ஆசிரியை, நடேஸ்வரக் கல்லூரி), யோகேஸ்வரி (சுவிஸ்), நாகரத்தினம், வசந்தா, றஞ்சன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26 – 1 - 97 அன்று இரணைப்பாலை முல்லைத்தீவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
ஐ. அமரகுலசிங்கம்
(மகன்)

தியேட்டர் வீதி,
இணுவில்.

(சி/51)

## திருமதி தங்கராசா சந்திரகுமாரி

(சந்திரா)

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திருமதி தங்கராசா சந்திரகுமாரி 27 – 01 - 1997 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் தங்கராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வடிவேல் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு திருமதி வயிரமுத்துவின் அன்பு மருமகளும், வனிதா, கவிதா, கிருபாகரன் (ஜேர்மனி), மதிவர்மன், ஷர்மிளி ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கவேல், காலஞ்சென்ற தவமலர், பவளவேல், காலஞ்சென்ற சிவமலர் சோதிவேல், வரதவேல், (ஜேர்மனி), ஞானவேல் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரரும், இராசமணி, காலஞ்சென்ற இராசதுரை, இராசமலர், சிவலிங்கம் (ஆசிரியர் உரும்பிராய் இந்துக் கல்லூரி, திரவியம், இராசாத்தி, தர்மதுரை, தவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸ்ரீமோகன், தவரஞ்சினி, பிரபாகரன், தர்சினி, மதுரா ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03 – 02 - 1997 திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. தவராஜா (V.T R )
(மைத்துனர்)

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(45065)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரில் பட்டினியால் வாடும் 230 இலங்கைத் தமிழ்க் குழந்தைகள்

தமிழனாய் பிறப்பதே பாவம்; அதிலும் ஈழத்தமிழனாய் பிறப்பது மகா பாவம். 20ஆம் நூற்றாண்டு முடிவடையப்போகும் இந்தத் தருணத்திலும்கூடஇலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் ஈர இதயம் கொண்டவர்கள் யாரும் இல்லாமல் போய்விட்டார்கள். அதனால் கண்ணீரை சுமந்து கொண்டு தாய்த்தமிழகம் நோக்கி வரும் ஈழத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகிக் கொண்டேயிருக்கிறது.

கடந்த ஜெயலலிதா ஆட்சியில் இந்த அகதிகள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. ''புலி வருது; புலி வருது'' என்று தமிழின பகைவர்கள் தினம் தினம் ''கரடி'' விட்டதால் பாதிப்புக்குள்ளானவர்கள் இந்த அப்பாவி அகதிகள் தான். ஆண் அகதியாக இருந்தாலும், பெண் அகதியாக இருந்தாலும் அவர்களை போராளி என சந்தேக முத்திரை குத்தி, விசாரணை என்ற பெயரில் கெடுபிடி செய்து ஆயிரத்தெட்டு கேள்விக்கணைகளால் கேவலப்படுத்தி, அதன்பிறகே கரையேற அனுமதித்தது அரசாங்கம்.

### அகதி முகாம் அவதி

அகதி முகாம்கள் என்ற பெயரில் அவர்கள் தங்கவைக்கப்பட்ட இடங்களோ கம்பிகள் இல்லாத சிறைச்சாலை. தாய் தமிழகத்திலும் சுதந்திரமின்றி, பட்டினி கொடுமைக்கு ஆளாகித் தவித்த அகதிகளின் எண்ணிக்கை அரசு கணக்கின் படி சுமார் 4000.

அரூரில் 230 பேர், வாளையாறு அணையில் 479 பேர், நாகாவரி அணையில் 284 பேர், தும்பல ஹள்ளியில் 629 பேர், கெலவாப்பள்ளியில் 238 பேர், கிருஷ்ண கிரியில் 430 பேர், கெங்கையாற்றில் 142 பேர், பாம்பாறு அணையில் 399 பேர், சின்னாறு பகுதியில் 94 பேர், மாரிகோண்பாளையத்தில் 108 பேர், ஊத்தங்கரையில் 107 பேர் என அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். ஜெயலலிதா ஆட்சி வீழ்ந்து தி.மு.க. அரசு வந்தபோது அகதிகளுக்கு நம்பிக்கையும் வந்தது. ஈழத்தமிழ் அகதிகளுக்கு தி.மு.க. அரசு உதவ வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

கல்வியமைச்சர் பேராசிரியர் அன்பழகன் ஒருகூட்டத்தில் பேசும்போது, ''கேட்பது ஈழத்தமிழர்களின் உரிமை; கொடுப்பது எங்கள் அரசின் கடமை'' என்று குறிப்பிட்டார். ஜெயலலிதா ஆட்சியை விட தி.மு.க. ஆட்சியில் அகதிகளின் நலனில் கொஞ்சம் அதிகமாக கவனம் செலுத்தப்பட்டது என்றாலும் வெளிமாநிலங்களுக்கு சென்ற அகதிகளின் நிலைமை படுமோசமடைந்தது.

இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளாக நடந்துவரும் போரினால், உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தமிழ் நாட்டுக்கு வந்த இலங்கைத் தமிழர்கள் 60 அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இவர்களின் குழந்தைகளுக்குக் கல்வி அறிவு கொடுக்க இலங்கைத் தமிழரான ராஜரத்தினம் முன்வந்தார். ''பிரைட் சொசைட்டி''

**பெங்களூரில் பட்டினியால் வாடும் 230 இலங்கைத் தமிழ்க் குழந்தைகள் குறித்து தமிழ்நாட்டின் பிரபல வார இதழ்கள் சில வெளியிட்ட தகவல்களின் தொகுப்பு இது.**

என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அகதி முகாம்களில் குழந்தைகளுக்குக் கல்வி வசதிஅளிப்பது இதன் நோக்கம்.

### பெங்களூரில்

இவ்விதம், பெங்களூரிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஜாக்கூரில் ஒரு பள்ளிக்கூடம் அமைந்தது. 'மெஸ்கா' என்ற அமைப்புக்குச் சொந்தமான கட்டடத்தில் 1990ஆம் ஆண்டு இப்பள்ளி துவக்கப்பட்டது.

தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாமில் தங்கியுள்ளவர்களின் 230 குழந்தைகளுக்கு இங்கு முதல் வகுப்பு முதல் 10ஆம் வகுப்புவரை கல்வி அளிக்கப்படுகிறது. 9 ஆசிரியர்கள் உள்ளனர்.

### நன்கொடை மூலம்

நன்கொடையாளர்களிடம் பணம் வசூலித்து ''பிரைட் சொசைட்டி இதை நிர்வகித்து வருகிறது. ஆனால் அது நிரந்தரமாகக் கிடைப்பதில்லை. குழந்தைகள் பராமரிப்பு, கல்விச் செலவுகளுக்கு மாதம் ரூபா 45 ஆயிரம் வரை தேவைப்படுகிறது. கிடைக்கும் நன்கொடையைப் பொறுத்தே பணம் கிட்டுவதால், சில நாள்களில் இந்தக் குழந்தைகள்,பட்டினி கிடக்க நேரிடுகிறது. 1994 ஆம் ஆண்டு நிலைமை மிகவும் மோசமடைந்தது.

இதைக் கண்ட ஒரு சமூக சேவகர் கர்நாடக நீதிமன்றத்தில் மனித உரிமையடிப்படையில் வழக்கு தொடர்ந்தார்.

### கர்நாடக உதவி நிறுத்தம்

அந்தக் குழந்தைகளின் பராமரிப்பு, படிப்புச் செலவுகளை ஏற்பதாக நீதிமன்றத்தில் கர்நாடகம் தெரிவிக்கவே, வழக்கு அத்துடன் நின்றது. அன்றிலிருந்து அரசு மாதம் ரூ. 41 ஆயிரம் வீதம் கொடுத்து வந்தது. இதுவும் தொடர்ந்து நீடிக்கவில்லை. 1995-ல் நிறுத்தப்பட்டது. அகதிகளுக்குச் செலவாகும் தொகையை மத்திய அரசு தரவில்லை எனக் காரணம் கூறப்பட்டது.

இதையடுத்து, அப்போது முதல்வராக இருந்த தற்போதைய பிரதமர் தேவ கௌடாவைப் பள்ளி நிர்வாகிகள் சந்தித்து குழந்தைகள் பட்டினி கிடப்பதை எடுத்துக் கூறினர். அவர்களுக்கு நம்பிக்கை வாக்குறுதி கொடுத்து அனுப்பிய கௌடா அதன் பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பள்ளி நிர்வாகிகள் எலகங்காவிலுள்ள கடைக்காரர்களிடம் கடன் வாங்கி குழந்தைகளின் ஒரு வேளைப் பசியை மட்டும் போக்கி வருகின்றனர். 'பிரைட் சொசைட்டி'தரும் பணத்தைக் கடனுக்கு அடைத்து ஒருவாறு சமாளித்து வருகின்றனர்.

பொருளாதார உதவிகள் முற்றிலுமாக நின்று போன நிலையில் ஈழத்தமிழ்க்குழந்தைகள் எலும்புக்கூடுகளாகிக் கொண்டிருக்கின்றன. எண்ணெய் காணாத தலை; கிழிந்துதொங்கும் உடை; ஒரு வேளை உணவுக்கும் வழி இல்லாத நிலை — என பரிதாபத்திற்குரிய ஜென்மங்களாக வாழ் நாளை எண்ணிக் கொண்டிருக்கின்றன தமிழ்ப் பிஞ்சுகள்.

இந்தக் கொடூரமான நிலைமையை விளக்கிய பள்ளியின் தலைமையாசிரியர் வியஜராஜ் ''இந்தக் குழந்தைகள் தமிழ் நாட்டின் அகதி முகாமில் இருந்த போது தமிழ் நாடு அரசு படிகொடுத்து வந்தது. குழந்தைகள் பெங்களூர் வந்த பிறகு படியை நிறுத்திவிட்டது. பிள்ளைகளுக்கு கேப்பைக் கூழ் சாப்பாடுகூட கொடுக்க முடியவில்லை. இரு மாநில அரசுகளின் உதவியும், மத்திய அரசு உதவியும் கிடைக்காமல் குழந்தைகள் அவதிப்படுவதைப் பார்த்து இரக்க குணம் உடையோர் உதவிக்கு வரமாட்டார்களா என ஏங்கு நிற்கிறோம்'' என்றார்.

அவர் மேலும் கூறியதாவது:-தேவ கௌடாவைச் சந்தித்து மனு கொடுத்த பிறகு தலைமைச்செயலரைப்பார்க்கச் சொன்னார்கள். அவர் சமூக நலத்துறைச் செயலரைப் பார்க்கச் சொன்னார். அங்கு விசாரித்தபோது உள்துறைக்குக் கோவையை அனுப்பிவிட்டதாகச் சொன்னார்கள்.

பின்னர் பெண்கள் குழந்தைகள் நல இலாகாவில் எங்கள் மனு இருப்பதாகக் கூறினர். அங்கிருந்து கடந்த மாதம் 9 ஆம் தேதி ஓர் அதிகாரி வந்து பள்ளியைப் பார்த்துவிட்டுச் சென்றார். இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை.

### தினமும் கேப்பைக் கூழ்

இக்குழந்தைகளுக்கு தினமும் கேப்பைக் கூழ் சாப்பாடு தான் கொடுக்க முடிகிறது. கடந்த சில மாதங்களாக அதற்குக்கூட வழியில்லை. கடனைக் கேட்டு வரும் கடைக்காரர்கள் கூட குழந்தைகள் பட்டினியால் வாடுவதைப் பார்த்துப் பேசாமல் சென்று விடுகின்றனர்.

எல்லாக் குழந்தைகளுக்கும் புத்தகம் வாங்கிக் கொடுக்க முடியவில்லை. ஒரு புத்தகத்தை 5பேர் படிக்கின்றனர். சில வகுப்புகளில் ஆசிரியர்களுக்கு மட்டுமே புத்தகம் உள்ளது. அதை வைத்து நோட்டுப் புத்தகத்தில் எழுதிப் படிக்கின்றனர்.— என்றார் தலைமையாசிரியர்.

### தடாவுக்கு பயந்த அரசியல் வாதிகள்

சொந்த நிலத்தில் இராணுவத்தின் கொடுமை; வந்த இடத்திலோ ஆதரவற்ற நிலைமை. செல்லும் திசையெல்லாம் சோகத்தையே சுவாசிக்கும் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்க பல அரசியல் கட்சிகளுக்கு துணிவில்லை. 'தடா' பயம் இன்னமும் அவர்களைத் தடுக்கிறது. தைரியமுள்ள தமிழர்களே! அரசியல் லாப நோக்கம் இல்லாத இளைஞர்களே! அவதிப்படும் ஈழத் தமிழ்ச் சகோதரனுக்கு உரக்க குரல் கொடுப்போம்; ஆதரவுக் கரத்தை நீட்டுவோம். அவர்களின் உரிமைப் போர் வெல்லட்டும்; தமிழனில் அகதி என்ற ஜாதியே இல்லை என்ற நிலை உருவாகட்டும். ★

# விமான ஓசையைக் கேட்டு நடுங்கும் குழந்தைகள்

விமான ஓசையைக் கேட்டால் குழந்தைகள் ஆர்வத்துடன் வெளியில் ஓடிவந்து வானத்தைப் பார்ப்பது வழக்கம். ஆனால் அந்த இரைச்சலைக் கேட்டாலே நடுங்குகின்றனர் பெங்களூர் அருகே ஜக்கூரில் படிக்கும் அகதிக் குழந்தைகள்.

இந்தப் பாடசாலையில் 4 வயது குழந்தைகள் முதல் 17 வயதான இளைஞர்கள் வரை உள்ளனர். இந்தப் பள்ளிக்கூடம் ஜக்கூர் விமானப் பயிற்சி நிலையத்தின் அருகே அமைந்துள்ளது.

காலை நேரத்தில் விமானிகள் பயிற்சியில் ஈடுபடும் போது, குழந்தைகள் தூங்கிக் கொண்டிருப்பர். அப்போது விமான சத்தத்தைக் கேட்டு பல குழந்தைகள் அலறி அடித்துக் கொண்டு எழுந்து விடுவார்களாம்.

இலங்கை இராணுவ விமானங்களின் குண்டு வீச்சை நேரில் பார்த்து அனுபவித்தவர்கள் இக் குழந்தைகள். குண்டு வீசும் விமானம் வரும் போது மறைவிடம் தேடி ஓடி ஒளிந்தவர்கள்; கண் முன்னே குண்டு வீச்சுக்கு பலியானவர்களைக் கண்டவர்கள்; பெற்றோருடன் தப்பித்து தமிழ்நாட்டுக்கு வந்த போதிலும் அந்த அச்சம் இன்னும் அவர்களை விட்டு நீங்கவில்லை.

இதை விட மோசமான நிலையில் ஒரு சிறுவன் இருக்கிறான். சத்தியமூர்த்தி என்ற அந்த 9 வயதுச் சிறுவன் பள்ளிக்கூடத்தில் இருக்கும் போது கூட விமான சத்தத்தைக் கேட்டால் இன்றும் கூட மயங்கி விழுந்துவிடுவதாகக் கூறினர். இவனுக்கு ஐந்து வயது இருக்கும் போதே இவனது பெற்றோர் யாழ். நகரில் இருந்து தமிழ் நாட்டுக்கு தப்பி வந்து விட்டனர்.

பத்தாம் வகுப்பு முடித்து விட்டு தொடர்ந்து படிக்க வசதியில்லாமல் 17 வயதுள்ள இரு இளைஞர்கள் தங்களது எதிர்காலத்துக்கு யாராவது உதவி செய்ய மாட்டார்களா என ஏங்கியபடியுள்ளனர். இந்த ஆண்டு மேலும் 10 பேர் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதுகின்றனர்.

பிரைட் சொசைட்டிக்கு இங்கு பள்ளிக்கூடம் நடத்த 10 ஆண்டுகள் அனுமதி கொடுத்தவர் கிளாடியஸ் குலோத்துங்கன் என்பவராவர். தற்போது இவர் சிங்கப்பூரிலுள்ளார். இவர் இருந்தாலாவது குழந்தைகளுக்கு ஏதாவது உதவி செய்வார் என முதல்வர் விஜயராஜ் கூறினார்.

1994 இல் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு, மாநில அரசின் உதவி கிடைக்க ஏற்பாடு செய்தவர் திக்விஜய் என்பவர். அவர் இப்போது எங்குள்ளார் எனத் தெரியவில்லை. திக்விஜய் இருந்திருந்தால், கர்நாடக அரசு உதவித் தொகையை நிறுத்தியதை அறிந்ததும் மீண்டும் நீதிமன்றத்தை நாடியிருப்பார் என பள்ளியின் முதல்வர் கூறினார். ★

# பல்லாயிரம் மக்கள் பங்குபற்றிய ஈழத் தமிழர் பாதுகாப்புப் பேரணி

ஈழத்தமிழர் பாதுகாப்புப் பேரணி நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்ற போது ஆயிரக் கணக்கானோர் அதில் கலந்து கொண்டனர்.

தென்மாவட்டங்களின் பல பகுதிகளில் இருந்தும் பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் ஆயிரக்கணக்கானோர் பஸ்களிலும் வான்களிலும் சென்னைக்கு வந்து பேரணியில் கலந்து கொண்டனர். பிற்பகல் 3.30 மணியளவில்பேரணிபுறப்பட்டது.

பேரணியின் போது பல்வேறு கோஷங்கள் எழுப்பப் பட்டன.

பேரணி தொடங்கு முன்னர் கட்சி அமைப்பாளர்கள் ஒலிபெருக்கி மூலம், தாங்களாக எந்த முழக்கத்தையும் செய்யக் கூடாது என்றும் — ஏற்கனவே அச்சிட்டுக் கொடுக்கப்பட்ட வாசகங்களைத்தவிர வேறெதையும் வாசிக்கக் கூடாது என்றும் — அறிவித்தார்கள்.

பேரணியின் பின் நடக்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகளைப் புகழ்ந்தும் ஆதரித்தும் பேசுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்; அவர்கள் தேசத்துரோகக் குற்றத்தின்கீழ் கைதுசெய்யப் படுவார்கள் என்று சட்டமன்றத்தில் தமிழக முதல்வர் கருணாநிதி ஏற்கனவே அறிவித்திருந்தார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் ராமதாஸ் இம்மாநாடு வன்னியில் அல்லலுற்றிருக்கும் 7 இலட்சம் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கவே கூட்டப்படுகின்றது என்றும் எந்தப் போராளி இயக்கத்திற்கும் ஆதரவாக இல்லை என்றும் கூறியிருந்தார்.

மதுரையில் பழ. நெடுமாறன் கூட்டவிருந்த ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டிற்கு அரசு அனுமதியளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானின் புதிய பிரதமர் பெனாஸிரா? நவாப் ஷெரீப்பா?

## இன்று பொதுத் தேர்தல் நடக்கிறது

இஸ்லாமபாத், பெப். 3

பாகிஸ்தானில் இன்று நடைபெறும் பொதுத் தேர்தலில் நவாப் ஷெரிப்பின் கட்சிக்கும், பெனாஸிர் பூட்டோவின் கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் 217 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு நடைபெறும் இத்தேர்தலில் நவாப் ஷெரிப்பின் கட்சியே வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.

நவாப் ஷெரிப்பின் கட்சிக்கு 29 சதவீதமும், பெனாஸிர் பூட்டோவின் கட்சிக்கு 23 சதவீதமும், பிரபல கிரிக்கட் வீரர் இம்ரான்கானின் கட்சிக்கு 10 சதவீதமும் கிடைக்கும் என அந்தக் கணிப்புக்கள் கூறுகின்றன.

தேர்தலின் போது வன்செயல்கள் வெடிக்கலாம் எனக் கருதி முன்னேற்பாடாக 2 இலட்சம் இராணுவத்தினரும், ஆயிரக் கணக்கான பரா இராணுவம் மற்றும் பொலிஸாரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கராச்சி, பஞ்சாப் உட்பட வெளி பிராந்தியங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை நடந்த தேர்தல் வன்செயல்களில் 100-க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அதே நேரம்— தேர்தலைக் கண்காணிக்க 200 வெளிநாட்டு ராஜதந்திரிகள் பாகிஸ்தான் வந்து சேர்ந்துள்ளனர்.

ஆஸ்திரேலிய முன்னாள் பிரதமர் மல்கம் பிறேஸர் தலைமையில் காமன் வெல்த் சபைக்குழு வந்துள்ளது. (இ-3)

# இந்தோனேஷியாவில் கலவரம்; தேவாலயங்களுக்கு தீ வைப்பு!

ஜகார்த்தா, பெப். 3

இந்தோனேஷிய நகரான ரெங்கஸ் டெங்க்லொக்கில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றும் சீன பௌத்த ஆலயம் ஒன்றும் முஸ்லிம்களால் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. மற்றும் நான்கு கிறிஸ்தவ தேவாலயங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

ரம்ழானை முன்னிட்டு முஸ்லிம் இளைஞர்கள் ''டிரம்'' அடித்து சத்தம் எழுப்புவது குறித்து சீனப் பெண் ஒருவர் முறைப்பாடு செய்ததை அடுத்தே முஸ்லிம்கள் கிறிஸ்தவ— பௌத்த ஆலயங்களைத் தாக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவில் வாழும் சீனர்கள் பலர் செல்வந்த கிறிஸ்தவர்கள்.

சென்ற மாதம் இவர்களுக்கு எதிரான கலகம் ஒன்றில் நால்வர் கொல்லப்பட்டிருந்தனர். (இ)

# அத்திலாந்திக் சமுத்திரத்தின் அடியில் எரிபொருள் படிவு

## பெருமளவில் உள்ளதாம்

வாஷிங்டன், ஜன. 3

மேற்கு அத்திலாந்திக் சமுத்திரத்தின் அடியில் மிகப் பெரும் அளவில் கார்பன் மற்றும் வீக்கேன் என்னும் எரிபொருள்கள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் 'நேச்சர்' (Nature) என்ற பத்திரிகையில் பிரசுரமான கட்டுரையில் தெரிவித்துள்ளனர்.

சுமார் மூவாயிரத்து ஐநூறு கோடி தொன் நிறையுள்ள இந்த எரிபொருள் அமெரிக்கா எரிபொருள் தேவையை அடுத்த 105 ஆண்டுகளுக்குப் பூர்த்தி செய்யப்போதுமானது என அவர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

எரிபொருள் தேவைகளுக்காக வேறு நாடுகளில் தங்கியிருக்கவேண்டிய கட்டாய நிலையில் அமெரிக்கா தற்போது தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

# பிரியங்கா திருமணத்தை ஒட்டி உயர்மட்ட பாதுகாப்பு ஏற்பாடு

புதுடில்லி, பெப். 3

நாளை மறுதினம் புதன் கிழமை நடைபெறவிருக்கும், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்காகாந்தியின் திருமணத்துக்கு உயர்மட்டப் பாதுகாப்பு வழங்கப்படவிருக்கிறது.

இந்தியாவின் முதலாவது அரசியல் குடும்பத்தின் வாரிசாகக் கருதப்படும் பிரியங்கா காந்திக்கும், ரோபர்ட்டுக்கும் நடைபெறும் திருமணத்தில் பெருந்தலைவர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

திருமணத்தின் பின்பு பிரியங்காவின் பாதுகாப்பு நலன் கருதி அரசாங்க அதிகாரிகளுக்கான வதிவிட வசதியும் செய்து கொடுக்கப்படவிருக்கிறது.

இவரது தந்தை ராஜீவ் காந்தியும், பாட்டி இந்திரா காந்தியும் சுட்டுக் கொல்லப்பட்டதால், இவருக்கு புதுடில்லியில் மத்திய பகுதியில் அதி உயர் பாதுகாப்பு பிரதேசத்தில் இந்த வதிவிட வசதி செய்யப்படவிருக்கிறது.

விசேட பாதுகாப்பு குழு இவர்களுக்கு 24 மணி நேரமும் உயர்மட்ட பாதுகாப்பை வழங்கும். (இ-3)

# ராக்கிங்குக்கு 2 வருட சிறை; சட்டமூலம் சபையில் தாக்கல்

தமிழ் நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களில் ''ராகிங்'' கில் (பகிடி வதையில்) ஈடுபடும் மாணவர்களுக்கு 2 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்க வகை செய்யும் சட்ட மூலம் தமிழக பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கல்வியமைச்சர் அன்பழகன் இந்த சட்டமூலத்தை தாக்கல் செய்துள்ளார்.

''ராகிங்'' என்பது புதிதாக கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவர்களை அச்சுறுத்தி வரும் ஒரு விடயமாகும்.

பொதுவாக மக்களிடையே இது அச்சம் கலந்த பயத்தை ஏற்படுத்தி வருகிறது.

இதுவரை நிர்வாக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பயனற்றவையாக காணப்பட்டன. ஆகவே சட்டத்தின் மூலம் இதைத் தடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அன்பழகன் தெரிவித்தார். (இ-3)

# உலக அரங்கில்

## ஜெனரல் சுட்டுக்கொலை

ஓய்வு பெற்ற அல்ஜிரிய ஜெனரல் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேற்கு அல்ஜீரிய நகரான ஓராவில் இச் சம்பவம் நடந்தது.

அல்ஜீரியாவில், இராணுவ ஆதரவு அரசுக்கு எதிராக இஸ்லாமிய அடிப்படை மதவாதிகள் யுத்தம் நடத்தி வருவது தெரிந்ததே.

## தேவகௌடா சுவிஸ் பயணம்

இந்தியப் பிரதமர் எச்.டி. தேவகௌடா உலக பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுவிற்சர்லாந்து நகரின் டாவோஸ் நகருக்குப் பயணமானார்.

ஒருவார சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் அவர் பொளாதார மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் இன்று மொறிஷியஸ் செல்ல உள்ளார். வருகிற வியாழக்கிழமை அவர் புதுடில்லி திரும்ப உள்ளார்.

நிதி அமைச்சர் பி. சிதம்பரமும் அவருடன் சேர்ந்து கொண்டுள்ளார். (இ)

### ஈழத்தமிழருக்கு ஆதரவான

# பேரணியில் சென்றோரில் மூவர் விபத்தில் மரணம்

சென்னை, பெப். 3

பாட்டாளி மக்கள் கட்சி சென்னையில் நடத்திய ஈழத் தமிழர் பாதுகாப்பு பேரணியில் கலந்து கொண்ட அக்கட்சியின் மூன்று தொண்டர்கள் வீதிவிபத்து ஒன்றில் உயிரிழந்தனர்; 25 பேர் காயமடைந்தனர்.

மாநாட்டையொட்டி நடைபெற்ற பேரணியின் போது பஸ் ஒன்றின் கூரையில் அமர்ந்து சென்றுகொண்டிருந்த இவர்கள் மரம் ஒன்று இடித்ததால் தூக்கி எறியப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் ராயப்பேட்டை அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக காவல் துறையினர் தெரிவித்தனர். (இ-3)

# யுத்தத்தை நிறுத்தினால் மட்டுமே கமிஷன் ஊழலையும் நிறுத்தலாம்

## இரண்டும் சங்கமமாகி விட்டன

**ஆயுதக் கொள்வனவுகளில் இடைத்தரகர்கள், கமிஷன் என்பன இப்போது யுத்தத்தின் ஓர் அங்கமாக மாறிவிட்டன. யுத்தத்தை நிறுத்தாவிடின் இந்த கமிஷன் ஊழலையும் நிறுத்த முடியாது. இது குறித்து "யுக்திய" சிங்கள வார இதழின் ஆசிரியர் தலையங்கத்தின் மொழி பெயர்ப்பை இங்கு தருகிறோம்.**

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான மூன்று யுத்த விமானங்கள் அண்மையில் வீழ்ந்து நொருங்கின. இதில் ஒன்று 50 கோடி பெறுமதியானதும் இஸ்ரேல் தயாரிப்பான தன்னியக்க வேவு பார்க்கும் விமானமாகும். அடுத்தது சீனத் தயாரிப்பான வை — 12 ரக விமானம். மூன்றாவது அண்மையில் இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ''கிபிர்'' ரக விமானம்.

இதற்கு முன்னர் அன்ரனோவ் — 32 ரகத்தைச் சேர்ந்த இரு விமானங்கள் தொழில் நுட்பக் கோளாறுகள் காரணமாக விழுந்து நொருங்கின. அவை ஒவ்வொன்றும் 25 கோடி ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை பயணம் செய்த ஹெலிக் கொப்டர் வவுனியாவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தரையிறக்கப்பட்டதற்கும் தொழில் நுட்பக் கோளாறே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. அந்தக் ஹெலியும் பின்னர் அழிக்கப்பட்டது இவற்றை விட

மேலும் சில விமானங்கள் வீழ்ந்து நொருங்கியதற்கு தொழில் நுட்பக் கோளாறே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

### அதிக கமிஷன் பெறும் ஆயுத வியாபாரம்

உலகில் அதிக கமிஷன் கிடைப்பது ஆயுத வியாபாரத்திலே ஆகும்.

சோவியத் யூனியன் சிதறுண்டுபோய் பனிப்போர் முடிவுக்கு வந்தவுடன் உலக ஆயுதச் சந்தையில் கடும் போட்டிகள் உருவாகின

சிறிலங்காவின் யுத்த செலவினங்கள் வர வர அதிகரித்துக் கொண்டுவரும் வேளையில் அதில் பெரும்பகுதி ஆயுதக் கொள்வனவுக்காகச் செலவழிக்கப்படுகிறது. அதன் பின்னணியில் கமிஷன் [illegible] வருகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த சில நாள்களில் ஜனாதிபதியின் செயலகத்தில் பணிபுரியும் ஓர் உயர் அதிகாரியின் மகனும் முக்கிய அமைச்சர் ஒருவரின் மகனும் ஆயுத வியாபாரத்தில் இடைத்தரகர்களாகச் செயற்படுகிறார்கள் என பல்வேறு பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

சீன அரசுக்குச் சொந்தமான ஆயுத விற்பனை நிறுவனமான நொறின்கோ நிறுவனத்துடன் ஆயுதக் கொள்வனவு தொடர்பான ஒப்பந்தம்கைச்சாத்திடப்பட்டுநடைமுறையில் இருந்த வேளையில், ஹொங்கொங்கில் இருந்த இடைத்தரகர் ஒருவர் மூலம் சீனாவில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய எடுத்த முயற்சிகள் தொடர்பான கடிதத் தொடர்புகளைக் கூட பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன. இந்த வியாபாரங்களில் இருந்து கமிஷன் பெறுபவர்கள் யார்? குறிப்பாக விமானப்படைக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட யுத்த விமானங்கள் தொடர்பான கொள்வனவில் இடைத்தரகராகச் செயற்பட்டவர் யார்? இந் நாட்டு மக்கள் இந்தக் கேள்விகளுக்கான பதிலை அறிந்து கொள்ள வேண்டும்.

### அரசியல்வாதிகள் தொடர்பு

சொத்துக்களை வெளியிடாத குற்றத்துக்காக முன்னாள் பாதுகாப்புச் செயலர் லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவும் இதே போன்ற மற்றுமொரு காரணத்துக்காக முன்னாள் இராணுவத்தளபதி சிசில் வைத்தியரத்னாவும் தற்போது நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வியாபாரங்களில் தொடர்புடைய அரசியல்வாதிகள் பற்றிய விவரங்களையும் வெளிக்கொணர வேண்டும். இது அத்தியாவசியமானது.

இந்த வியாபாரத்தின் பின்னணியில் இடம்பெறும் பெருமளவிலான கமிஷன் கொடுப்பனவுகள் யுத்தத்தின் ஓர் அங்கமாக மாறியுள்ளன. யுத்தத்தைநிறுத்தாவிட்டால் இந்தக் கமிஷன் ஊழலையும் நிறுத்த முடியாது என்பதே எமது எண்ணம் ஆகும். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பாடசாலை மாணவருக்கு 1996 இல் சீருடைத்துணி இல்லை

## வவுனியா செயலக மாநாட்டில் தகவல்

கொழும்பு, பெப். 3

''1996 ஆம் ஆண்டுக்குரிய பாடசாலைச் சீருடைகள் இராணுவகட்டுப்பாட்டற்ற வன்னிப் பிரதேசத்துக்கு இது வரை வழங்கப்படவில்லை. சுமார் ஒரு லட்சம் மாணவர்கள் வன்னிப்பகுதியில் பாடசாலைகளுக்குச் செல்கின்ற போதிலும் பலர் சீருடை இல்லாத காரணத்தினால் வர்ண உடைகளிலேயே செல்கின்றனர். இன்னும் பெருமளவு மாணவமாணவிகள் சீருடையில்லாத காரணத்தினால் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கிறார்கள்.''

கடந்த வாரம் வவுனியா செயலகத்தில் நடைபெற்ற வன்னிப்பிரதேச கல்வி நிலைமை தொடர்பான முக்கிய கூட்டமொன்றிலேயே மேற்கண்ட விடயங்களை அரச அதிகாரிகளும் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் சுட்டிக்காட்டினர்.

கிளிநொச்சி அரச அதிபர் எஸ். தில்லைநடராஜா, முல்லைத்தீவு அரச அதிபர் ஆர். தர்மகுலசிங்கம், மன்னாரைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி. ஜேக்கப் ஆகியோர் தத்தம் பிரதேச கல்வி நிலைமையின் அவலங்கள் குறித்து வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன், எஸ். சண்முகநாதன், பாலச்சந்திரன் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கூறினர்.

நிவாரணமாக உலர் உணவு உதவிகள் பெறாத குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் தொழில் வாய்ப்பின்றி உள்ளவர்களும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்கள் காலை உணவு உண்ணாமல் பாடசாலைக்குச் செல்கின்றார்கள் என்றும் —

இவ்வாறு வரும் மாணவர்கள் பாடசாலைகளில் மயங்கி வீழ்கின்றனர் என்றும் — தினசரி 20 தொடக்கம் 40 மாணவர்கள் வரை மயங்கி வீழ்வதால் அவர்களைப் பராமரித்து வீடுகளுக்குக் கூட்டிச் செல்ல சக மாணவர்கள் உதவிபுரிய வேண்டியுள்ளதால் அவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது என்றும் - அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## அரச செலவில் சடலம் அடக்கம்

தென்மராட்சி, பெப். 3

சாவகச்சேரி ஆஸ்பத்திரி சவக்காலையில் வைக்கப்பட்டிருந்த பெண் ஒருவரின் சடலம் உறவினர்கள் வராததால் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

பளை வண்ணான் கேணியைச் சேர்ந்த ஆசையம்மா (வயது 56) என்பவரின் சடலமே அடக்கம் செய்யப்பட்ட சடலம் ஆகும். (இ-117)

## தேங்கிக் கிடக்கும் போட்டிப்பரீட்சை முடிவுகள்

கொழும்பு, பெப். 3

விண்ணப்பதாரர்களிடம் கட்டணம் அறவிடப்பட்டு பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பல போட்டிப் பரீட்சைகளின் முடிவுகள் வெளியிடப்படாமல் அத்திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

கல்வி, உயர் கல்வி அமைச்சுடன் தொடர்பான பல போட்டிப் பரீட்சைகளின் முடிவுகளே இவ்வாறு தேங்கிக்கிடக்கின்றன என்று தெரியவருகின்றது. (இ-10)

## இளைஞர் வள நிலையம்

சண்டிலிப்பாய், வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பணிமனையில் அண்மையில் இளைஞர் வள நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விளையாட்டுத் துறையில் இப்பிரதேச இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டமொன்று இந்த இளைஞர் வள நிலையத்தினால் விரைவில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டது. (இ-235)

## நிவாரணத்துக்கு மா வழங்குவது நிறுத்தம்

உலர் உணவு நிவாரண விநியோகத்தில் மா வழங்கப்படாத காரணத்தினால் வறுமைக் கோட்டுக் கீழே வாழும் மக்கள் மாவைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரு தடவைகள் விநியோகிக்கப்பட்ட நிவாரணத்திலும் மா வழங்கப் படவில்லை.

இது குறித்து யாழ். செயலகத்தில் [illegible] ஆலோசனைக் கூட்டத்திலும் கூறப்பட்டது. (இ-145)

சேதமடைந்த

## சென். பீற்றர்ஸ் தேவாலயத்தை படையினர் பார்வையிட்டனர்

நவாலி, பெப். 3

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தை கொழும்பிலிருந்து வந்த பாதுகாப்புப் படை உயரதிகாரிகள் பார்வையிட்டனர்.

1995 ஆம்ஆண்டு ஜூலை 9 ஆம்திகதி இத்தேவாலயம் புக்காரா விமானத் தாக்குதலினால் சேதமடைந்ததுடன் அதன் சுற்றாடலிலுள்ள பல வீடுகளும் முருகன் ஆலயம் ஒன்றும் சேதத்திற்குள்ளாகியிருந்தன.

அதேசமயம் சேதமடைந்த சென் பீற்றர்ஸ் தேவாலயமும் அதன் சுற்றாடல் பகுதிகளும் மற்றும் அதனுடன் இணைந்த வீதிகளும் அப்பகுதி இளைஞர்களினால் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகின்றன. (இ-100)

## கொழும்பு - யாழ். விமானச்சேவை; 8 மாத வாடகை ரூ. 30 கோடி

கொழும்பு — யாழ்ப்பாணம் விமான சேவைக்காக சிறிலங்கா விமானப் படையால் ஈடுபடுத்தப்பட்டுள்ள லயன் — எயார் விமானங்களுக்கு கடந்த வருடம் முதல் 8 மாதங்களில் வாடகையாக 30 கோடிரூபா வழங்கப்பட்டுள்ளது.

உக்ரேனைச் சேர்ந்த விமானமோட்டிகளால் செலுத்தப்படும் அன்ரனோவ் — 26 ரகத்தைச் சேர்ந்த இந்த விமானங்களுக்கு ஒரு முறை கொழும்பிலிருந்து யாழ். வந்து திரும்ப ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (55 ஆயிரம் ரூபா) வழங்கப்படுகிறது.


லயன் — எயார் விமான சேவையில் 4 விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கடந்த வருடம் முதல் 8 மாதங்களில் இந்த விமானங்கள் 5 ஆயிரத்து 304 தடவைகள் யாழ். வந்து திரும்பியுள்ளன.

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதல்களால் வடபகுதியில் அடுத்தடுத்து விமானங்கள் அழிக்கப்பட்டதால் சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த விமான ஓட்டிகள் வடபகுதிக்கு விமானங்களைச் செலுத்த மறுத்த காரணத்தினாலேயே இவ்வாறு கூலிக்கு விமானங்களை ஈடுபடுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது எனத் தெரியவருவதாக 'ராவய' செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

---

## நினைவஞ்சலி



தோற்றம்: 06 — 07 — 1911

மறைவு: 18 — 01 — 1993

### மூத்ததம்பி கந்தையா

திதி: 03—02—1997


மட்டுவிலூர் மூத்ததம்பி கந்தையா
மாநிலத்தை விட்டகன்ற
நான்காம் ஆண்டுநாளின்று!

என்றும் நீங்காநினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

தென்மட்டுவில், சாவகச்சேரி. (45 007)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



அமரர்

### சின்னையா இரத்தினேஸ்வரன்

தாயின் மடியில்: 03 — 07 — 1952

இறைவன் அடியில்: 04 — 01 — 1997

திதி:- 03 - 02 - 1997

ஆருயிர்த் தெய்வமே! அன்பின் அப்பாவே!
நீங்கள் எம்மை விட்டுச் சென்று முப்பத்தியொரு
நாள்கள் ஓடி மறைந்தாலும் ஆறாது எம் துயரம்!
மறக்காது உங்கள் இனிய முகமும் கனிவான பேச்சும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

முருகையன் கோயிலடி,
நீர்வேலி தெற்கு. (45066)

---

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி

### சிவஸ்ரீ பாலசுந்தரக்குருக்கள் கந்தவேள்குருக்கள்

(பிரதம அர்ச்சகர்-திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில், மீசாலை)

திருவோங்கு தாதாண்டு தைத்திங்கள் நாள்
திகழ்ந்து வளர் பிறைத்துவா தசித்தி தியில்
இருளோங்கு விதி செய்த இழி சதி யால்
இகப்விட் டகாலமாய் மறைந்தசெல்வன்
அருளோங்கு மாவடிப் பிள்ளையார் கோயில்
அர்ச்சகராம் கந்த வேள் குருக்கள் அந்த
திரு நீலகண்டன் திருவ டிக்கீழி ருக்க
சிரந்தாழ்த்திக் கண்ணீரஞ் சலி செய் கின்றோம்.
ஓம்சாந்தி! ஓம் சாந்தி! ஓம்சாந்தி.

பரிபாலகர்கள்.
யா/நா. அரசகேசரிப் பிள்ளையார் கோயில்.

நாயன்மார்கட்டு (சி/50)

---

## 2 ஆவது வருட நினைவஞ்சலி



தாயின் மடியில்: 28 — 10 — 1923

பூமித்தாயின் மடியில்: 26 — 01 — 1995

### அமரர் ஐயன் தம்பிப்பிள்ளை

திதி: 03—02—1997

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசி
நல்வழி காட்டி எங்களை வாழவைத்த எங்கள்
அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் என்றும்
எங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தவகல்:
மனைவி திருமதி சரஸ்வதி தம்பிப்பிள்ளை,
தில்லையம்பதி, கோண்டாவில். (45067)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள CD — 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. கு. யோகேந்திரன், சங்கானை — பொன்னாலை வீதி. (மானிப்பாய் பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்பாக) மானிப்பாய். (45044)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

வி. என். எஸ். உதயச் சந்திரனின் 5 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் (புத்தகம்) புதிய அம்சங்களுடன் மீளாய்வு செய்யப்பட்ட புதிய பதிப்பாக வெளிவந்து விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-33)

### காணி விற்பனைக்கு

3¼ பரப்பு காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும், மீனாட்சி அம்மன் கோவிலுக்கும் அருகாமையில். விவரங்களுக்கு: செ. தங்கராசா, பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (45040)

### ஜாதக குறிப்பு

வெளிநாட்டில் பிறந்த குழந்தைகளுக்கும், உள்நாட்டில் பிறந்த குழந்தைகளுக்கும் வாக்கிய திருக்கணித முறைப்படி நியாயமான கட்டணத்துடன் மூன்று தினங்களில் குறிப்பெழுத, ஜோஸ்யர் சோதிட சேவை, 308 A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (9223)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. R. S. K. பாம், முருகபதி, உடுவில், சுன்னாகம் (உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி,) அல்லது R.S.K. பாம் தபாற்கந்தோர் வீதி, மானிப்பாய். (சண்டிலிப்பாய் வீதி, மானிப்பாய்) (45050)


**A|L 96**

**Day Classes**

**கலை, வர்த்தகம்**

**(மீட்டல் வினா விடை)**

ஆரம்பம்; 04-02-1997
காலை 9-00 மணி

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்.
(44864)


### திருமணசேவை

துர்க்கா திருமண சேவை இல. 178, நாவலர் வீதி, பிறவுண்றோட் சந்தி, யாழ்ப்பாணம். திங்கள் தொடக்கம் சனி மட்டும் சேவை நடைபெறும். பழைய தொடர்பு உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். (9232)

### தவறிவிட்டது

க. அருளானந்தம் ஆகிய எனது உடுப்பும், சில பொருள்களும் அடங்கிய பை சுட்டிபுர அம்மன் கோயிலடியில் தவறிவிட்டது. அதைக் கண்டெடுத்தவர்கள் 'தேனமுதம்' பருத்தித்துறை வீதி, கொடிகாமம். என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (9231)

### நாடகம் எழுதுவது

எப்படி என்று விளக்கிக் கூறும் முதலாவது தமிழ் நூல். இலக்கியமும், இலக்கிய விமர்சனமும், ஒரு நாடகத்தை விமர்சிப்பது எப்படி என்பனவும் விளக்கப்பட்டுள்ளன. எழுதியவர் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. (44915)

## இலவச தையல் பயிற்சி

சண்டிலிப்பாய் (வலி.தென் மேற்கு) பிரதேச செயலர் பிரிவுக்கான இலவச தையல் பயிற்சி நிலையம் கடந்த புதன்கிழமை மானிப்பாய் கிழக்குப்பகுதியிலுள்ள கட்டடம் ஒன்றில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

36 யுவதிகள் இந்த தையல் நிலையத்தில் பயிற்சி பெற்று வருவதாகவும்—

ஒரு வருட காலம் இவர்கள் பயிற்சியைப் பெறுவார்கள் என்றும்— பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார். (இ-135)

## நவீல்ட் அதிபர் பிரதிஷ்டை

கைதடி, நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் புதிய அதிபராக திருமதி ஏஞ்சலா சந்திரா பத்மபாலன் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான பிரதிஷ்டை ஆராதனை இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கைதடி நவீல்ட் பாடசாலையின் சிற்றாலயத்தில் நடைபெறும். (இ)


உ

ஊரெழு அருள் மிகு

**ஸ்ரீ வீரகத்திவிநாயகர் தேவஸ்தானம்**

**அஷ்டாதசதின (பதினெட்டு நாள்)**

**மகோற்சவ விஞ்ஞாபனம்**

5 - 02 - 1997 புதன்கிழமை காலை 11 மணி அளவில் துவஜாரோணம் (கொடியேற்றம்)
14 - 02 - 1997 வெள்ளிக்கிழமை திருமஞ்சம்
16 - 02 - 1997 ஞாயிற்றுக்கிழமை வசந்தோற்சவம்
19 - 02 - 1997 புதன்கிழமை வேட்டைத்திருவிழா
20 - 02 - 1997 வியாழக்கிழமை சப்பறத்திருவிழா
21 - 02 - 1997 வெள்ளிக்கிழமை 10 மணிக்கு இரதோற்சவம்
22 - 02 - 1997 சனிக்கிழமை தீர்த்தோற்சவம் மாலை 4 மணியளவில் கொடியிறக்கம்
23 - 02 - 1997 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பூங்காவனம்

**ஷ நிர்வாகசபையினர்**

(45046)



**சுவாமி விவேகானந்தரின்**

**யாழ்ப்பாண விஜயத்தின்**

**ஞாபகார்த்த முத்திரை**

**வெளியீட்டு வைபவம்**

இடம்: **யாழ். இந்துக்கல்லூரி**
குமாரசுவாமி மண்டபம்

காலம்: **1997 - 02 - 03** திங்கட்கிழமை.
நண்பகல் 12.00 மணி (புதிய நேரம்)

தலைவர்: **அதிபர்**, யாழ். இந்துக்கல்லூரி.


முத்திரை வெளியிட்டு வைப்பவர்:
**திரு. சு. கோடீஸ்வரன்**
பிரதம தபால் அதிபர், யாழ்ப்பாணம்.

செயலாளர்.

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை. (சி/49]


## 8ஆவது திருமண நினைவஞ்சலி

**(3 - 2 - 1997)**



**சீவரட்ணம் உதயகுமார்**
**(கலட்டிக் கண்ணன்)**

அன்னை மடியில்: **31 - 8 - 1964**
அழிப்பில்: **16 - 1 - 1997**

**திருமண நாள்: 3 - 2 - 1989**

கண்ணா! அன்பு இதயம் பூண்ட மணிவண்ணா!
இரண்டு இதயங்கள் ஓரிதயமாய் வாழ மகிழ
உதயகுமாரின் இராணியாகிய செல்வராணி
உதயனின் செல்வியாகி, துணையாகி, வாழ்வில்
செல்வங்கள் நான்கினை உதிக்கவைத்தனர்,
நிர்மல மன நிரோஷன், கண்போல் நிவேதிகா,
துணை தரு விதுஷன், அன்புறை யதுஷன்
நான்கு உதரங்கள் சக உதரங்களாகி
சகோதர உதயம் பெற்று ஒளி காட்ட
கண்ணனும் செல்வியும் நாலுடன் உறவுடன்
அறுவராகி அரும் பெரும் வாழ்வே வாழ்க என
திருமணமாகி மங்கலம் எட்டாண்டுகள் ஏற
ஐயகோ! இடியா அகால வாழ்வா ஆ......
கண்ணீர் அருவியாக, கண்ணன் வாழ்வு இதுவா?
பவள மல்லிகை போன்ற செல்வியின் நெற்றி
திலகம் துலங்கும் குங்குமம் பாசத்தீபத்தின்
அக்கினியாக, வாழ்வைப் பறித்தனரே, ஏ!
பண்பாடு பண்பாடு வாழ்வின் பண்பாடு
பெண்பாடு பெரும் பாடாகி விட்டதே!
என் செய்வோம்! துன்பமெனத் தோன்றிடிலோ
தொலையாத துன்பமயம் அழுவோம், துடிப்போம்
உயிரில் தன் உயிர் உருக்கிச் சேர்ந்த கண்ணா!
செல்வியின் உயிரில் உருகிய உயிர்க்குமார்
நாலு மழலைகளில் தன்னைக் கண்ட கலட்டிக்
கண்ணன்

இன்னலில் கிடந்த துயரகோலங்கள்!
சகோதர சகோதரிகளின் பாச உரு எங்கே?
பெற்றாரின், உறவினரின், தோழர்களின்
உதவிக் கரமெங்கே? அத்தானை அண்ணா
ஆக்கிப் பெருமை தந்த உதய குமாரா!
சோகத்தின் உச்சிவரை தொட்டுவிட்டால்
அகத்தின் அடிநிலை விரக்தி, அவ்விரக்தியின்
தனிநிலை சோகம் — கண்ணா! கண்ணா!
எமது குரல் கேட்கமாட்டாதா?
கேட்கும்! கேட்கும்! காதுபடக் கேட்கும்!
காலம் மாறும் மாறியே தீரும்!

உன் பிரிவைத் தாங்க மாட்டாது
தவித்துக் கொண்டிருக்கும்;

**மனைவி, பிள்ளைகள்,**
**தகப்பன், தாய், சின்னையா,**
**சின்னம்மா, மாமாமார், மாமிமார்,**
**சகோதரர்கள், மைத்துனர்கள்,**
**மைத்துனிகள், மற்றும் உற்றார்,**
**உறவினர், நண்பர்கள்.**

''குற்றாலம்''
77/58, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (45052)





**ஆவது ஆண்டிலும்.....**

**அதே முதன்மையான**
**முன்னைய ஆசிரியர் குழுவுடன்**

திரு. R. மருதலிங்கம், திரு. S. K. மகாலிங்கம்,
திரு. T. சாம்சன், திரு. N. ரட்ணசிங்கம்,
திரு. T. தயாளன், திரு. B. இராஜசேகரன்,
திரு. T. வரதராஜா

**O/L விசேட வகுப்புகள்**

ESTD:- 1973 REGD:- No J/7993

**The Express Institute**

(45063)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இரு வேறு நீதிகளா?

படையினரால் கைது செய்யப்பட்ட பின்னரோ, அல்லது விசாரணைக்கெனக் கூட்டிச் செல்லப்பட்ட பின்னரோ, 30,000 பொதுமக்கள் காணாமற் போயிருக்கிறார்கள் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திடுக்கிடும் செய்தியை பத்திரிகை எதுவுமோ அன்றி மனித உரிமை நிறுவனம் எதுவுமோ அதிர்ச்சித் தகவலாக வெளியிடவில்லை. நாட்டின் தலைவரான ஜனாதிபதியே தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் இந்த விவரத்தைத் தெரிவித்திருக்கிறார்.

— வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 5,800 பொதுமக்கள் காணாமற் போயுள்ளனர்.

— நாடு முழுவதிலும் காணாமற்போன 30,000 பேரில்' 19,400 பொது மக்கள் குறித்தவிசாரணைகளை முடிவடைந்துவிட்டன.

— காணாமற் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் தொடர்பான சம்பவங்களில் தொடர்புடைய பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்கள் மற்றும் பொலீஸ் உத்தியோகத்தர்கள் குறித்து அந்தந்தப் படைத்தளபதிகளுக்குத் தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

— எனினும் அந்த உத்தியோகத்தர்கள் மீதான விசாரணை அறிக்கைகள் கிடைக்கும் வரை அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது; கட்டாய லீவில் தானும் அனுப்ப முடியாது.

— இவை ஜனாதிபதி வெளியிட்ட விவரங்கள்.

காணாமற்போகச் செய்தல், கடத்தப்படுதல், கொலை செய்யப்படுதல், கற்பழிக்கப்படுதல் என்பன அப்பட்டமான மனித உரிமை மீறல்கள்.

அவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் பெரும் தாமதம் உண்டு என்பதனையே ஜனாதிபதியின் தகவல் மறைமுகமாகக் கூறுகிறது.

இத்தகைய தாமதம் நீக்கபப்டாவிட்டால் அது குற்றம் புரிவோரைத் தண்டிப்பதில் தயக்கம் காட்டுவதற்கு ஒப்பானதாகும். அரசு இத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமானால் மக்களைப் பாதுகாக்கும் தனது மிக முக்கியமான பொறுப்பில் இருந்து நழுவுவதாகவே கொள்ளப்பட வேண்டும்.

மக்களை அவர்கள் குற்றம் புரிந்தார்கள் என்பதற்காக பல கூரிய சட்டங்களின் கீழ் தண்டிப்பதில் வேகம் காட்டும் அரசாங்க நிர்வாகம், அவர்களைப் பாதுகாக்கும் முக்கிய விவகாரத்தில் ஆமை வேகத்தில் நகர நினைப்பது ஜனநாயக வரன்முறைகளுக்கு உகந்ததல்ல.

விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டால், அதற்குக் காரணமானவரை விசாரிப்பது, தண்டிப்பது எல்லாம் எவ்வளவு விரைவாக நடக்கின்றன? சட்டவிதிகள் என்னென்ன மாதிரி எல்லாம் செயல்வடிவம் பெறுகின்றன? அப்படியிருக்க முப்பதினாயிரம் பேர் காணாமற்போன விவகாரத்தில் தாமதத்தை நியாயப்படுத்த முனையக்கூடாது.

மக்களைத் தண்டிக்க ஒரு நீதி; அவர்களைப் பாதுகாக்க இன்னொரு நீதியா? அவ்வாறாயின் அது அராஜகமே அன்றி வேறல்ல.

# சில இடங்களில் இ. தொ. கா. சுயேச்சைக் குழுவாக போட்டி

## கொழும்பில் கணேசலிங்கத்தின் பட்டியலில்

கொழும்பு, பெப். 3

உள்ளூராட்சித் தேர்தல்களின் போது சில இடங்களில் சுயேச்சைக் குழுவாகத் தனித்துப் போட்டியிடுவது என்றும்—

ஐ.தே. கட்சியை எந்த இடத்திலும் ஆதரிப்பதில்லை எனவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

இ. தொ. காவின் முக்கிய தலைவர்கள் கூடி இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் —

தற்சமயம் இந்தியாவில் தங்கியுள்ள இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் நாடு திரும்பியதும் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இ. தொ.காவின் செயலாளர் ஆறுமுகம் தொண்டமானே என்று தாங்கள் தெரிவித்ததை ஏற்க தேர்தல் ஆணையாளர் மறுத்துள்ளதையடுத்து, இ. தொ. கா. பிரமுகர்கள் சுயேச்சைக்குழுவாக தமது கட்சி வேட்பாளர்களை மலையகத்தில் நிறுத்த முடிவு செய்துள்ளது.

நுவரெலியா, அம்பகமுவ, பசறை, அப்புத்தளை, கல்முதுல, பன்வில பகுதிகளில் சுயேச்சைக் குழுவாக தம் வேட்பாளர்களை இ. தொ. கா நிறுத்தும்.

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் — பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவுடன் — சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடவிருக்கும் முன்னாள் மேயர் கே. கணேசலிங்கத்தின் பட்டியலில் தாங்கள் நிறுத்துவது என்றும் இ.தொ.கா. முடிவு செய்துள்ளது.

(உ-3-150)

## கணேசலிங்கத்தின் அணியில் பல கட்சிகளின் பிரமுகர்கள்!

கொழும்பு, பெப். 3

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவுடன் போட்டியிடவிருக்கும் 59 பேர் கொண்ட சுயேச்சைக் குழுவில் பல்வேறு கட்சிகளையும், அணிகளையும் சேர்ந்தோர் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சுயேச்சைக் குழுவில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுமாறு ஜனாதிபதி தம்மைக் கேட்டுள்ளதாகவும் —

இந்தக் குழுவில் ஆறு ஐ. தே. க. வினர் போட்டியிடுவதாகவும் —

முன்னாள் மேயர் கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி. முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, இ. தொ. கா., ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்தவர்களே இந்த அணியில் போட்டியிடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-3-150)

## உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சி — குற்றம் சாட்டுகிறது ஜே. வி. பி.

கொழும்பு, பெப். 3

''உள்ளூராட்சிச் சபைகளைக் கலைத்து அவற்றுக்குப் பொறுப்பான விசேட ஆணையாளர்களை அரசு நியமித்துள்ளமை, தேர்தலைப் பின்போட எடுத்துள்ள முயற்சியாகும் என்று ஜே. வி. பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

1970 ஆம் ஆண்டும் இவ்வாறே தேர்தலுக்கு ஏற்பாடு செய்து, பின்னர் உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஆணையாளர்களை நியமித்து விட்டு தேர்தலை ஒத்தி வைத்தது அன்றைய அரசாங்கம்

இந்தச் சதி நடவடிக்கைக்கு எதிர்க் கட்சியான ஐ. தே. கவும் உடன் பட்டுள்ளது. இந்தச் செயலை ஜே வி. பி. கடுமையாக எதிர்க்கும் — என்றும் அவர் கூறினார்.

(உ-3-150)

## தேர்தலைப் பகிஷ்கரிக்க ஸ்ரீமானி அணி தீர்மானம்

கொழும்பு, பெப், 3

உள்ளூராட்சித் தேர்தலில் பங்குபற்றாது அதைப் பகிஷ்கரிப்பது என்று அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி முடிவு செய்துள்ளது என்று ''த ஐலண்ட்'' பத்திரிகையின் ஞாயிறு பதிப்பில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் தமது கட்சிக்கு போதிய ஆசனங்கள் ஒதுக்கப்படவில்லை என்று காரணம் காட்டியே இந்த முடிவை அவர்கள் எடுத்துள்ளனர்.

உள்ளூராட்சிச் சபைகளில் 616 இடங்களை தமது கட்சிக்கு ஒதுக்குமாறு அக்கட்சி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடம் கோரியிருந்தது.

ஆனால் அக்கட்சிக்கு 120 இடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மொத்தம் 4649 இடங்களில் போட்டியிடுகின்றன.

மொத்த இடங்களில் 20 சதவீத இடங்களை ஒதுக்குமாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கோரிவந்த போதும், இரு சதவீத இடங்களே அக்கட்சிக்கு ஒதுக்கப்பட்டது.

அதே நேரம் முன்னணியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சிக்கு 60 சதவீத இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

(உ-3-150)

## பொ. ஐ. மு. வேட்பாளர் பட்டியல்: மேயர் பதவிக்கான பெயர்கள் இறுதி நேரத்திலே வெளியாகும்

கொழும்பு, பெப். 3

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் மாநகர சபைகளுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலில் மேயர் பதவிக்காகப்போட்டியிடும் வேட்பாளர்களின் பெயரை இறுதி நேரம் வரை வெளியிடுவதில்லை என பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் கொழும்பு மேயர் பதவிக்கு ஜீவன் குமாரதுங்கா போட்டியிடுவார் என பத்திரிகைகள் தெரிவித்தன. ஆனால் வேட்பாளர் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

(இ-10)

## இலங்கை விமானிகளுக்கு பிரிட்டிஷ் விமானிகள் பயிற்சி

கொழும்பு, பெப். 3

விமானப்படையினருக்கு விசேட பயிற்சி அளிக்க பிரிட்டிஷ் விமானப்படையில் இருந்து ஓய்வு பெற்ற விமான ஓட்டிகளைக் கொண்ட குழு ஒன்று இலங்கை வரவிருக்கிறது

இந்தக் குழுவை இலங்கைக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் விமானப்படையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள அங்கம் வகிக்கும்குழு ஒன்று ஏற்கனவே இலங்கைக்கு வந்து விட்டது என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

விமானப்படையில் பணியாற்றி வந்த — நன்கு பயிற்சி பெற்ற — விமான ஓட்டிகள் பலரை விமானப் படை இழந்து விட்டதால், புதிய பயிற்சி ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## முன்னாள் அமைச்சரின் மகன் வங்கிக்கடன் செலுத்தாது நாட்டிலிருந்து தப்பி ஓட்டம்

கொழும்பு, பெப். 3

முன்னாள் விவசாய அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மதாசா பண்டாவின் மகன் ஆர்.எம். எம்.டி. பண்டா மக்கள் வங்கியிலிருந்து ஒருகோடியே 77 லட்சம் ரூபா கடன் பெற்று அதை திரும்பிச் செலுத்தாத காரணத்தினால் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

அவரைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் பணித்திருந்த வேளையில் நாட்டை விட்டு அவர் தப்பிச் சென்று விட்டார்.

வங்கியில் இருந்து பெற்ற கடன் மூலம் சீனாவில் இருந்து 5 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்தை அவர் இறக்குமதி செய்து கொழும்பு ஆமர் வீதியில் களஞ்சியப்படுத்தி [illegible] கடனை அவர் [illegible] கூறப்பட்டது.

(இ-10)

## குஜ்ரால் வரும் சமயத்தில் வேறு விமானங்கள் வந்திறங்க தடை விதிக்கப்பட்டிருந்தது!

கொழும்பு, பெப். 3

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் கடந்த மாதம் இலங்கைக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு விசேட விமானத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய சமயம், அந்த விமானத்தளத்தில் வேறு எந்த விமானமும் வந்து இறங்கவோ அல்லது புறப்பட்டுச் செல்லவோ முடியாதவாறு தடை விதிக்கப்பட்டிருந்ததாம்.

பெங்களூரில் இருந்து புறப்பட்ட அவரது விமானம் கட்டுநாயக்காவில் வந்து இறங்கும் வரையான நேரத்திலேயே இந்தத் தடை நடைமுறையில் இருந்ததாகவும் —

கடந்த காலத்தில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த எந்த தலைவருக்காகவும் இப்படியான பாதுகாப்பு முனேற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

### நாளை

தை 22

செவ்வாய்க்கிழமை

திதி: துவாதசி பின் இரவு 4.22 வரை.

நட்சத்திரம்: மூலம் முன்இரவு 11.08 வரை.

வைஷ்ணவ ஏகாதசி

ராகுகாலம்: 3.35 - 5.05

சுபநேரம்: 11.05 - 12 35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்துவதற்கு புலிகள் முயற்சி!

கொழும்பு, பெப். 3

'யாழ். குடாநாட்டில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்க விடுதலைப் புலிகள் முயற்சிப்பதாகத் தெரிகுறது' என்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

வடக்கு—கிழக்கில் சண்டையில் தளர்வு நிலை ஏற்பட்டுள்ள நிலையில் சர்வதேச கவனம் வடக்கு—கிழக்கின் பால் திரும்பியுள்ளது.

அதன் அர்த்தம் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் ஸ்தம்பித்துள்ளனஎன்பதல்ல; யாழ். குடாநாட்டில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்க அவர்கள் முயற்சிப்பதாகத் தெரிகிறது.

அரசியல் செயற்பாட்டுக்காக யாழ்ப்பாணம் சென்றுள்ள மூன்று தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டைச் சமாளிப்பது விடுதலைப் புலிகளின் தற்போதைய நடவடிக்கையாக அமைந்துள்ளது. — என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ-3-150)

## ஜெயலலிதா ஆஸ்பத்திரியில்

சென்னை, பெப். 3

தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கடுமையான முதுகுவலியால் சென்னையில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் நேற்றுக் காலை சேர்க்கப்பட்டார். (உ-3)

## பெற்றோர் தின விழா

யாழ்ப்பாணம், பெப். 3

கிறிஸ்துவுக்காக இளைஞரின் பெற்றோர் தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பரி. யாக்கோபு சபையின் பரிஸ் மண்டபத்தில் நடைபெறும். (இ)

# ராஜதந்திரிகளின் வவுனியா விஜயம்

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் றொபின் ராபெல் வவுனியாவுக்கும் சென்றிருந்தார்.

அங்கு தடுப்பு முகாம்களில் உள்ள அகதி மக்களின் நிலைமை, வவுனியா வருபவர்கள் படையினரால் கையாளப்படும் முறை, அவர்களின் மீளக்குடியேற்றம் ஆகியன குறித்து அவர் அங்கு ஆராய்ந்தார்.

ராபெலுடன் அமெரிக்க தூதரக அரசியல் துறைச் செயலாளர் ஸ்கொட் டெலிசி, பாதுகாப்பு அதிகாரி லெப்டினன்ட் கேணல் மைக்கல் கரோல் புறா ஆகியோரும் வவுனியா சென்றிருந்தனர்.

நுவரெலியாவில் இருந்து ஹெலி மூலம் வவுனியா சென்ற இவர்கள் அங்கு படையினரின் முன்னணிக் காவலரண்களையும் பார்வையிட்டனர்.

இதற்கிடையில் —

கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதுவர் பீற்றர் வேர்லி கடந்த சனியன்று வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

வடக்கில் இருந்து வவுனியா வந்துள்ள அகதிகளுடன் நேரில் கலந்துரையாடிய அவர், அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

தாண்டிக்குளத்தில் பயணிகளுக்கு பாஸ் வழங்குவதையும் அவர் பார்வையிட்டார்.

இராணுவ மற்றும் அரச அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

கனேடிய தூதுவர் இன்று வவுனியா செல்கிறார். (உ-3-150)

## ஈழத்தமிழர் ஆதரவு . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம் மீது இந்திய அரசு விதித்துள்ள தடையை உடனே விலக்க வேண்டும்; ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண அந்த விடயத்தில் இந்தியா உடனே தலையிட வேண்டும்''—என்று மாநாட்டில் சிறப்புரையாற்றிய முன்னாள் மத்திய அமைச்சரும், சமதாக் கட்சித் தலைவருமான ஜோர்ஜ் பெர்ணான்டஸ் உணர்வுபூர்வ அழைப்பு விடுத்தார்.

ராஜீவ் காந்தி என்ற ஒருவரின் குடும்பத்துக்கு நடந்த சோகத்தைக் காரணம் காட்டி, ஈழத்தில் ஆயிரக் கணக்கான குடும்பங்களின் சோகங்களைக் கண்டும் காணாததும் போல இந்தியா வாய்மூடி மௌனித்திருப்பது நியாயம்தானா? —எனக் கேள்வி எழுப்பினார் அவர்

விடுதலைப் புலிகளின் பங்கேற்பு இல்லாமல் ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சாத்தியம் இல்லை என்று கூறிய அவர், இலங்கை அரசு அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய கூலிப் படைகளை தமது நாட்டுக்கு அழைத்திருக்கிறது; இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லையா என்றும் கேள்வி எழுப்பினார்.

தேவகௌடா காங்கிரஸ் கட்சியின் சிறைக் கைதியாக இருக்கக்கூடாது. ஈழத் தமிழர் பிரச்சினையில் உடனடியாக ஈடுபட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இனவாத அடக்குமுறைக்கு எதிராக ஈழத் தமிழர் நடத்தி வரும் தார்மீகமான விடுதலைப் போரை இந்தியா ஆதரித்து அங்கீகரிக்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் அங்கு நிறைவேறியது.

இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரத்தம் தோய்ந்த இனப்பிளவில் இருந்து இந்தியா விலகியிருகக முடியாது. உலகெங்கும் நடந்த விடுதலைப் போராட்டங்களை இந்தியா ஆதரித்தது போல ஈழத்தமிழ் விடுதலைப் போராட்டத்தையும் ஆதரிக்க வேண்டும் என்று கோரும் மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டில் உரையாற்றிய பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிடாது என இந்திய வெளியுறவுச் செயலர் குஜ்ரால் கொழும்பில் கடந்த மாதம் கூறியதை கடுமையாகச் சாடினார்.

ஈழத்து தமிழ் மக்கள் எங்கள் உடன் பிறந்த சகோதரர்கள். அவர்கள் எங்கள் இரத்தம். எங்கள் இரத்தத் தோடு தொடர்புடையோர் படுகொலை செய்யப்படும் போது எப்படி அதை இந்தியா உள்நாட்டு விவகாரம் என்று தட்டிக்கழிக்க முடியும்? — என்று அவர் கேள்வி எழுப்பினார்.

விடுதலைப் புலிகளுக்கு நான் அளிப்பது தார்மீக ஆதரவாகும். தார்மீக ஆதரவு தர எங்களுக்கு உரிமை உண்டு. இதற்காக சிறை செல்லவும் நான் கவலைப்படவில்லை — என்றும் அவர் கூறினார்.

மாநாட்டில் பேசிய மற்றும் பலரும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசி, அதற்காக தாங்கள் சிறை செல்லத் தயார் என்றும் கூறினர்.

தனித்தமிழ் ஈழம் அமைவது தான் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஒரே தீர்வு என மாநாட்டின் வேறு ஒரு தீர்மானம் கூறியது.

ஈழத்தமிழர் பகுதியை ஆக்கிரமித்துள்ள இலங்கை இராணுவம் அந்தப் பகுதிகளை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று கோரும் தீர்மானமும் அங்கு நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாட்டில் பஞ்சாப் மாநில முன்னாள் நீதிபதி அஜித்சிங் பேயின், தென்னாபிரிக்கா வாழ் தமிழர் வீரபத்திரன், சுவிட்ஸர்லாந்து தமிழ் ஈழ ஒற்றுமை தொடர்புமைய இணைச் செயலாளர் மாதரீன் மைக்கல், பெரியார் திராவிடக் கழகத் தலைவர் ஆனைமுத்து ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பாரதீய ஜனதாக் கட்சி மற்றும் சிவசேனைக் கட்சிகளின் தலைவர்களுக்கு மாநாட்டில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை,

(முன்னர் வந்த செய்திகள் 3 ஆம், 4 ஆம் பக்கங்களில்)

(உ-3)

## கொழும்பு . .

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களிடம் தேவையான பத்திரங்கள் இல்லாது விட்டால் அவர்கள் பொலீஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தீவிர விசாரணைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இதற்கிடையில் —

சுதந்திரதின நிகழ்ச்சிகளை ஒட்டி தலைநகர் கொழும்பில் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய இடங்கள் என்று கருதப்படும் பகுதிகளில் பல வீதிகள் நாளை மூடப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி உரை நிகழ்த்தவுள்ள சுதந்திர சதுக்கத்துக்கு அழைக்கப்பட்ட விருந்தினர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது (உ-3-150)

## 15 படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை 1. 30 மணி வரை நடைபெற்ற தாக்குதலை அடுத்து முகாமைக் கைப்பற்றிய புலிகள் அங்கிருந்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு முகாமைத் தீயிட்டுக் கொளுத்தியதாக 'துரதர்ஷன்' அறிவித்தது.

தானியங்கி ஆயுதங்கள், ராக்கெட்டுகள் மூலம் செலுத்தப்படும் கிரனேட்டுகள், மோட்டார் ஷெல்கள் போன்றவற்றைப் புலிகள் பயன்படுத்தியதாகத் தெரிகின்றது.

அருகிலிருந்த சித்தாண்டி இராணுவ முகாமிலிருந்து படையினர் உதவிக்கு வருவதைத் தடுப்பதற்காக அந்த முகாம் மீதும் புலிகளின் அணி ஒன்று ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்த ஷெல்கள் சித்தாண்டி மற்றும் செங்கலடிப் பகுதிகள் மீது வீழ்ந்து வெடித்தன.

சித்தாண்டி இராணுவ முகாமுக்குள் வீழ்ந்த ஷெல்லால் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; 3 படையினர் காயமடைந்தனர்.

செங்கலடியில் வீழ்ந்த ஷெல்லுக்கு இரு பொதுமக்கள் இறந்தனர். 4 பேர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலில் காயமுற்ற படையினர் பொலன்னறுவ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

உயிரிழந்த இரு பொதுமக்களின் சடலங்களும் ஏறாவூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டன. காயமுற்ற பொதுமக்களும் ஏறாவூர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

தாக்குதலுக்கு இலக்கான முகாமில் கஜபா படையணியைச் சேர்ந்த சுமார் நூறு படையினர் நிலை கொண்டிருந்ததாகவும் —

அவர்களில் ஒரு தொகுதியினர் வெளியே ரோந்து சென்றிருந்த சமயம், அதனைப் பயன்படுத்தி முகாம் மீது புலிகள் தாக்குதல் தொடுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் தாக்குதலின் பின்னர் மேலதிக படையினர் வீதி மார்க்கமாக முகாமைச் சென்றடைந்தனர் என்றும்—

அவர்கள் முகாம் பகுதியில் தங்கள் நிலைகளைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர் என்றும் நேற்று அறிவிக்கப்பட்டது.

இத் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் ஏழுபேர் கொல்லப்பட்டதாக புலிகளின் வானொலித் தொடர்பை இடைமறித்துக் கேட்ட போது தெரியவந்ததாக தெரிவிக்கப்பட்டது

இத் தாக்குதலில் புலிகள் ரி 56—ரகத் துப்பாக்கிகள் 13 மற்றும் 81 மி. மி. மோட்டார்கள்-2 உட்பட பல ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் கூறப்பட்டது.

(உ-3-1509)

### கொழும்பு உயர் நீதிமன்றத்தில்

# 400 வழக்குகள் தொடர்பான சான்றுப் பொருள்கள் மறைவு

கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட சுமார் 400 வழக்குகள் தொடர்பான சான்றுப் பொருள்கள் நீதிமன்றக் களஞ்சியத்தில் இருந்து காணாமல் போயுள்ளன.

இது தொடர்பாக நீதிமன்ற ஊழியர்கள் இருவர் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

சுமார் 40லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், போதை வஸ்துகள், சுடு படைக் கலங்கள் ஆகியன இவ்வாறு காணாமற் போன பொருள்களில் அடங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

# படைகளுக்கான விநியோகத்தை சீர்குலைக்க கிழக்கில் முயற்சி!

கொழும்பு, பெப். 3

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில்உள்ள படையினருக்கான விநியோகத்தை சீர்குலைக்கவும் —

மட்டக்களப்பு மாவட்டத்தைத் தனிமைப்படுத்தவும்—

விடுதலைப் புலிகள் திட்டமிடுகின்றனர். இதற்காக அவர்கள் வெலிகந்த — பொலன்னறுவப் பகுதிகளில் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளனர் என்று ''சண்டே லீடர்'' தகவல் வெளியிட்டுள்ளது.

திருகோணமலை — ஹபரண வீதி, அம்பாறை — பதுளை வீதி, பொலன்னறுவ — மட்டக்களப்பு வீதி ஆகியனவே படையினருக்கான விநியோகப்பாதைகளாக இருக்கின்றன.

இந்தப் பாதைகளை விடுதலைப் புலிகள் துண்டித்தால் மட்டக்களப்பு, திருகோணமலை மவட்டங்களில் உள்ள படையினருக்கு கப்பல் மூலமாக அல்லது விமானம் மூலமாகவே விநியோகத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகும் — என்று மேலும் அப்பத்திரிகை தெரிவித்தது. (உ-3-150)

## சாயிபாபாவின் ஆசி பெற்றார் ராணுவத் தளபதி

கொழும்பு, பெப். 3

சத்தியசாயி பக்தரான இராணுவத் தளபதி றோஹான் தலுவத்த தமது மனைவி ஜயந்தியுடன் கடந்த வாரம் புட்டபர்த்திக்கு சென்று சாயிபாபாவின் ஆசியைப் பெற்றுத் திரும்பியுள்ளார்.

கடந்த வருடமும் இவர் புட்டபர்த்திக்குச் சென்று சாயிபாபாவின் வழிபாட்டில் பங்குபற்றியிருந்தார். (உ-3-150)

## கண்ணி வெடிகள் புதைப்பு?

கொழும்பு, பெப். 3

கிளிநொச்சி – வவுனியா பாதையில் அல்லது வவுனியா-மன்னார்ப் பாதையில் இராணுவ நடவடிக்கை இடம்பெறலாம் என எதிர்பார்த்து கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பாதைகளில் படையினர் முன்னேற்றத்தைத் தடுக்க விடுதலைப்புலிகள் கண்ணி வெடிகளை புதைத்து வருகின்றனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளதாக ''சண்டே லீடர்'' செய்தி வெளிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கிளிநொச்சி நகரை மீண்டும் கைப்பற்றுவதை தமது முன்னுரிமைப்பட்டியலில் முதலில் வைத்துள்ளனர் என்பது அங்கு நடக்கும் நிகழ்வுகளில் இருந்து தெரிய வருகிறது என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(உ- 150- 3)

## யாழ். நகருக்கு 'பக்ஸ்' வசதி

யாழ்ப்பாணத்துக்கு விரைவில் 'பக்ஸ்' வசதி கிடைக்கவிருக்கிறது.

அனேகமாக இந்த வசதி இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கும்.

இதற்கான ஏற்பாடுகளை 'ரெலிகொம்' நிறுவனம் செய்து வருகின்றது.

'ரெலிகொம்' நிறுவனத்தின் யாழ். தொடர்பு நிலையத்தில் 'பக்ஸ்' இயந்திரம் பொருத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.(உ-3)

## படையினருக்கு அமெரிக்க பயிற்சி

கொழும்பு, பெப். 3

அமெரிக்க கடற்படை கொமாண்டோ குழுவினர் இலங்கைக்கு வந்து இலங்கை கடற்படையுடன் சேர்ந்து தங்காலைக் கடற்பகுதியில் கூட்டுப்படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

இதற்கிடையில் —

இராணுவ உயர் அதிகாரிகளான பிரிகேடியர் சாந்த கொட்டகொட, கேணல் சீவிலி வணிகசேகரா ஆகியோர் உயர் பயிற்சிக்காக அடுத்த வாரம் அமெரிக்காவின் பசுபிக் தளத்துக்கு செல்லவிருக்கின்றனர்.

(உ-3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டடினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 2?2/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03 - 02 - 1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org